# மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

## Provincial Department of Education Northern Province

## G.C.E.(A/L) Pilot Examination


| | | | | |
|---|---|---|---|---|
| **இந்துசமயம் I** <br> **Hinduism I** | **Two Hours** <br> **Gr -13 (2021)** | **42** | **T** | **I** |

### பகுதி I

1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1)(2)(3)(4)(5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைய விடைத்தாளில் **புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

**01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று ஏதாவது ஒரு காரணத்தால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாததைத் தெரிவுசெய்க.**

1) (1) வேதங்கள் (2) இதிகாச புராணங்கள் (3) தர்மசாஸ்திரங்கள்
(4) ஆகமங்கள் (5) மெய்க்கீர்த்திகள்

2) (1) பிரம்மசபை (2) இரத்தினசபை (3) கனகசபை (4) தாமிரசபை
(5) சித்ரசபை

3) (1) திருமூலர் (2) யோகர்சுவாமி (3) அகத்தியர்
(4) பட்டினத்தார் (5) சிவவாக்கியர்

4) (1) வாரம் (2) திதி (3) அயனம்
(4) நட்சத்திரம் (5) யோகம்

5) (1) சாலோகம் (2) சாமீபம் (3) சாரூபம்
(4) கைவல்யம் (5) சாயுச்சியம்

**6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் தரப்பட்டுள்ளன அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை, பொருந்தாத அச்சோடிச் சொல்லைத் தெரிவுசெய்க.**

6)
1. பூதயக்ஞம் - உயிரினங்களின் பொருட்டு செய்யப்படும் வழிபாடு
2. சந்நியாசம் - வாழ்வின் இறுதிப் படிநிலை
3. சுவதர்மம் - ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செய்தல்
4. தர்மம் - பிரபஞ்ச நியதியைக் குறிப்பது
5. புருடார்த்தங்கள் - பிரமச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்

7)
1. சிகரக்கோயில் - சிகரத்துடன் அமையும் கோயில்கள்
2. மலைதளிகள் - மலைமேல் கட்டப்படுபவை
3. குடைதளிகள் - குகைகளைக் குடைந்து அமைக்கப்படும் ஆலயங்கள்
4. இரதக்கோயில்கள் - செதுக்குத் தளிகள் என அமைக்கப்படுபவை
5. கட்டுத்தளிகள் - கற்களை சீரிய முறையில் அடுக்கிக் கட்டப்படுபவை

8) 1. விஞ்ஞானகலர் - ஆணவமலம் மட்டும் உள்ளவர்
2. சகலாவத்தை - உயிர் மலபந்தங்களுக்கு உட்பட்டு நிற்கும் நிலை
3. பெத்தநிலை - பசு, பாசங்களைச் சார்ந்த நிலை
4. சுழுத்தி - ஆன்மாக்களின் உறக்க நிலை
5. சதசத்து - ஆன்மா சிவத்தையும் மலத்தையும் சாரும்

9) 1. சின்முத்திரை - பரம்பொருளின் மேலான தன்மையை வலியுறுத்துவது
2. இலிங்கோற்பவர் - சிவாலயக் கருவறையின் தெற்குத் திசையில் அமைவது
3. தட்சணாமூர்த்தி - இறைவனின் குருவடிவம்
4. சோமஸ்கந்தர் - உண்மை, அறிவு, மகிழ்வு என்பவற்றின் சேர்க்கை
5. சிவாநந்த நடனம் - நடராஜ தத்துவம் பற்றிப் பேசுவது

10) 1. யோகசூத்திரம் - கபிலரால் இயற்றப்பட்டது
2. சரகசம்ஹிதை - இந்து மருத்துவ நூல்
3. பிரம்மசூத்திரம் - பிரஸ்தான திரவியங்களில் ஒன்று
4. பஞ்சமரபு - பண்ணிசை பற்றிய நூல்
5. வாயுபுராணம் - சிவபுராணங்களுள் ஒன்று

**11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் அ, ஆ என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. அ நிரலுக்கு ஏற்ற விதத்தில் ஆ நிரல் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க**

11)

| (அ) | | (ஆ) |
|---|---|---|
| ஸ்ரீபாஷியம் | A | ஸ்ரீவைகுண்டத்தை அடைதல் |
| ஐஸ்வர்யம் | B | பிரம்மசூத்திர உரை |
| வீடுபேறு | C | முத்திக்கான வழி |
| தர்மபூத ஞானம் | D | இறைவனின் பண்பு |
| பிரபக்தி | E | நிறைவுற்ற அறிவு |

(1) BADCE (2) BADEC (3) BDAEC (4) BDCEA (5) BDECA

12)

| (அ) | | (ஆ) |
|---|---|---|
| பாஞ்சராத்திரம் | A | வேதாந்த தேசிகர் |
| திருஓணநன்னாள் | B | நிம்பாக்கர் |
| வடகலை மரபு | C | குப்த மன்னர்கள் |
| தசசுலோகி | D | வைணவ ஆகமம் |
| பரமபாகவதர் | E | விஸ்ணுவின் ஜனனம் |

(1) DEABC (2) DEBAC (3) DECBA (4) EABCD (5) EACBD

13)

| (அ) | | (ஆ) |
|---|---|---|
| ஆகமம் | A | சிவவிரதம் |
| பிராயச்சித்தம் | B | மறைத்தல் |
| சோமவாரம் | C | சுவதந்திரம் |
| மௌனோற்சவம் | D | குற்ற நிவர்த்திக்கான கிரியை |
| முப்பொருள் உண்மை | E | ஞானபாதம் |

(1) ACDEB (2) ADCBE (3) BAECD (4) CDAEB (5) CDBEA

14)

| (அ) | | (ஆ) |
|---|---|---|
| திருப்பெண்ணாகடம் | A | சிதம்பரமான்மியம் |
| நெஞ்சுவிடுதூது | B | தசகாரியம் |
| கோயிற்புராணம் | C | குருபெருமை கூறுவது |
| உண்மைநெறிவிளக்கம் | D | அகச்சமய மறுப்பு |
| சங்கற்ப நிராகரணம் | E | மெய்கண்டதேவர் |

(1) EABDC (2) EBACD (3) EBDAC (4) ECABD (5) ECBAD

15) (அ) (ஆ)

| | | |
|---|---|---|
| வட்டக்களரி | A | அரிசியால் நிரப்பப்படுவது |
| முள்ளுக்காவடி | B | கூத்து ஆடும் இடம் |
| அம்மன் கரகம் | C | கார்த்திகை விளக்கீடு |
| கொம்புமுறி | D | வன்பக்தி |
| கோலாட்டம் | E | கண்ணகி வழிபாடு |

(1) BDAEC (2) BEADC (3) BEDAC (4) CBEDA (5) CEBDA

**16 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க**

16) "பெரியகவி'' எனப் போற்றப்படும் குப்தமன்னன்
(1) சந்திரகுப்தன் (2) நரசிம்மன் (3) ஸ்கந்தகுப்தன் (4) மாமல்லன் (5) சமுத்திரகுப்தன்

17) "வேதாந்த சங்கிரகம் " என்ற நூலின் ஆசிரியர்
(1) வேதாந்த தேசிகர் (2) இராமானுஜர் (3) மத்துவர் (4) சங்கரர் (5) நீலகண்டர்

18) இன்மை பற்றிய அறிவைத் தரும் அளவைப் பிரமாணம்
(1) உரை (2) காட்சி (3) கருதல் (4)அனுபலாப்தி (5) அர்த்தாபத்தி

19) ஓரிடத்தில் நிலையாக நிறுவப்படுகின்ற திருவுருவங்கள்
(1) சலம் (2) அசலம் (3) சலாசலம் (4) பங்கம் (5) அபங்கம்

20) ஜலசயனம் என அழைக்கப்படும் பல்லவர் கட்டுத்தளி
(1) காஞ்சி கைலாசநாதர் கோயில் (2) காஞ்சி வைகுந்தப்பெருமான் கோயில்
(3) மாமல்லபுரத்து கடற்கரைக் கோயில் (4) முத்தீஸ்வரர் கோயில்
(5) மதங்கேஸ்வரர் கோயில்

21) பிற தத்துவப் பிரிவுகளை மறுத்துரைப்பதாக. அமையும் பிரம்ம சூத்திரத்தின் அத்தியாயம்
(1) அவிரோதம் (2) சமன்வயம் (3) சாதனம்
(4) பலன் (5) பிரமாணவியல்

22) மூன்றாம் சிம்மவர்மன் எனும் பெயரைக் கொண்ட சைவநாயனார்
(1) சேரமான்பெருமாள் நாயனார்
(2) அதிராவடிகள்
(3) மெய்ப்பொருள் நாயனார்
(4) சிறுத்தொண்டர்
(5) ஐயடிகள் காடவர்கோன்

23) அடியார் பெருமை பற்றிப் புகழ்ந்து கூறிய முதல் நாயனார்
(1) சுந்தரமூர்த்தி நாயனார் (2) மாணிக்கவாசகர் (3) அமர்நீதி நாயனார்
(4) சேக்கிழார் (5) திருநாவுக்கரசு நாயனார்

24) ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை என்பவரால் ஆங்கில மொழியில் நடாத்தப்பட்ட சைவ சஞ்சிகை
(1) சைவ காவலன் (2) சித்தாந்ததீபிகை (3) ஞானாமிர்தம்
(4) விவேகானந்தன் (5) மெய்கண்டார் நெறி

25) நூல் முறை தெரிந்து சீலத்து ஒழுகு என்று குறிப்பிட்டவர்
(1) திருவள்ளுவர் (2) தாயுமானவர் (3) ஔவையார்
(4) சிவப்பிரகாசர் (5) பாரதியார்

26) கண்ணனது பிள்ளைக் குணங்களையும் இளம்பருவச் செயல்களையும் கூறும் நூல்
(1) திருவாய்மொழி (2) திருப்பாவை (3) பெரியதிருவந்தாதி
(4) நான்முகன் திருவந்தாதி (5) பெரியாழ்வார் திருமொழி

27) பின்வருவனவற்றுள் சிவராத்தி மகிமை கூறும் நூல்கள் அடங்கிய தொகுதி
(1) கந்தபுராணம், சிவராத்திரி புராணம், இலிங்கபுராணம்
(2) பிரமபுராணம், பெரியபுராணம், திருக்கரசைப்புராணம்
(3) திருக்கரசைப்புராணம், சிவராத்திரிபுராணம், இலிங்கபுராணம்
(4) திருக்கரசைப்புராணம், கந்தபுராணம், சிவராத்திரி புராணம்
(5) திருக்கரசைப்புராணம், அக்கினிபுராணம், இலிங்கபுராணம்

28) ஈழத்தில் ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த இந்து சமய. இலக்கியங்கள் அடங்கிய தொகுதி
(1) கதிரைமலைப்பள்ளு, சரசோதி மலை
(2) பரராசசேகர், கோணேசர் கல்வெட்டு
(3) வையாபாடல், அமுதாகரம்
(4) பறாளைவிநாயர் பள்ளு, மறசையந்தாதி
(5) கண்ணகி வழக்குரை, தட்சணகைலாய புராணம்

29) ஈழத்தில் வளர்ந்த சோதிடக் கலையுடன் நெருங்கிய தொடர்புடைய நூல்
(1) பிருஹத்சம்ஹிதை (2) கௌசிகநாடி (3) இலகு ஜாதகம்
(4) சிரோதயம் (5) முஞ்சல

30) நாலாயிரத் திவ்விய பிரபந்தங்களைத் தொகுத்தவர்
(1) யமுனாச்சாரியார் (2) இராமானுஜர் (3) பிள்ளை லோகாச்சாரியார்
(4) வேதாந்த தேசிகர் (5) ஸ்ரீநாதமுனிகள்

- **31 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவுசெய்க**

31) இந்து சமய அறிவுப் பரம்பலுக்கான தகவல் தொழில்நுட்பம்
(1) இணையம் (2) தொலைக்காட்சி (3) ஒலிநாடா
(4) ஒளிநாடா (5) இறுவெட்டு

32) வேதத்தின் பகுதியாகிய ஆரணியகம்
(1) வேள்வி விதிகளை விரித்துரைக்கின்றது
(2) வானப்பிரஸ்தர்களுக்குரியது
(3) உறுதிப்பொருள் பற்றிய சிந்தனைகளைக் கூறுகின்றது
(4) பிராமணங்களின் இறுதிப்பகுதியாக அமைகின்றது
(5) “வனநூல்” எனச் சிறப்பிக்கப்படுவது

33) இராமாயணம்
(1) இருபத்து நான்காயிரம் சுலோகங்களைக் கொண்டது
(2) இந்துசமுதாய விழுமியங்களைப் பிரதிபலிக்கின்றது
(3) இந்தி மொழியில் துளசிதாசரால் பாடப்பட்டது
(4) பதினெட்டுப் பருவங்களைக் கொண்டது
(5) இராம அவதாரத்தின் மகிமையை வெளிப்படுத்துவது

34) இந்து வானியல் மரபு
(1) உஜ்ஜைனி (2) கார்க (3) லடாச்சாரியார்
(4) தன்வந்திரி (5) ஆரியப்பட்டீயம்

35) சந்தானகுரவர் மெய்கண்டார்
(1) பரஞ்சோதி முனிவரால் உபதேசம் பெற்றவர்
(2)“சகலாகமபண்டிதர்” எனும் சிறப்புப் பெயர் பெற்றவர்
(3)“சிவஞானபோதம்” எனும் நூலை இயற்றியவர்
(4)“சுவேதனப் பெருமாள்” எனும் பிள்ளைத் திருநாமத்தை உடையவர்
(5)திருவெண்ணெய் நல்லூர் பொல்லாப் பிள்ளையாரின் திருவருளால் கலைஞானம் பெற்றவர்

**கீழ்வரும் பகுதியில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>சர்க்கம் | B<br>ஏரம்ப உபநிடதம் | C<br>சிலாபரீட்சணம் | D<br>குளிர்த்தி | E<br>இருக்கை |
| F<br>சிலப்பதிகாரம் | G<br>யாத்திரை | H<br>வம்ச வரலாறு | I<br>அகத்தியர் | J<br>மூர்த்திபேதம் |

36) ஆகம திருவுருவ வழிபாட்டோடு தொடர்புடைய சேர்மானம்
(1) AC (2) BJ (3) CJ (4) DC (5) DJ

37) புராண இதிகாசங்களோடு தொடர்புடைய சேர்மானம்
(1) AH (2) AJ (3) BH (4) BJ (5) DA

38) மடங்களோடு தொடர்புடைய சேர்மானம்
(1) CD (2) EG (3) EJ (4) GI (5) GJ

39) விநாயகர் வழிபாட்டோடு தொடர்புடைய சேர்மானம்
(1) BC (2) BD (3) BI (4) HI (5) HJ

40) கண்ணகி வழிபாட்டோடு தொடர்புடைய சேர்மானம்
(1) DE (2) DF (3) FG (4) FI (5) FJ

- **விரதங்கள், துவைத வேதாந்தம் ஆகியன பற்றிய விடயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.**

**விரதங்கள்**

A - முக்கரணங்களாலும் இயற்றப்படுவதனால் மனம் ஒருநிலைப்படுகின்றது
B - சூரிய உதயத்தின் பின் பாரணை செய்தல் வேண்டும்
C - ஊழின் இறுதியில் இருளைப் போக்க உருத்திரமூர்த்தி சிவலிங்கத்தை வழிபட்டார்
D - இறைவனின் திருவருளைப் பெற வழிகாட்டுகின்றன
E - சிவதோத்திரம் பாடுதலும் கேட்டலும் செய்தல் வேண்டும்
F - நஞ்சானது சிவனை ஏதும் செய்யாதிருக்க இரவு முழுவதும் தேவர்கள் வழிபாடியற்றினர்

41) சிவராத்திரி விரதம் பற்றிய தெய்வீக வரலாற்றோடு தொடர்புடைய சேர்மானம்
(1) AB (2) BC (3) CD (4) CE (5) CF

42) விரதத்தின் நியதிகளோடு தொடர்புடைய சேர்மானம்
(1) AC (2) BD (3) BE (4) DE (5) DF

43) விரதங்களினால் ஏற்படும் பயன்களோடு தொடர்புடைய சேர்மானம்
(1) AB (2) AC (3) AD (4) BD (5) BE

**துவைத வேதாந்தம்**

A - எல்லாப் பொருள்களின் உள்ளீடாக அமைவதுடன் அவற்றின் செயற்பாட்டிற்கும் வழிகாட்டியாக அமைகிறது

B - முக்குணங்களின் அடிப்படையில் விடுதலை தீர்மானிக்கப்படுகின்றது

C - போன்றிருத்தல், சார்ந்திருத்தல் ஆகிய இருநிலைகளில் வைத்து விளக்கப்படுகின்றது

D - சார்பற்றதும் மிக உயர்ந்த உள்பொருளாகவும் அமைகின்றது

44) துவைதம் கூறும் ஈஸ்வரனுடன் தொடர்புடைய சேர்மானம்

(1) AB (2) AC (3) AD (4) BC (5) BD

45) துவைதம் கூறும் ஆன்மாவுடன் தொடர்புடைய சேர்மானம்

(1) AC (2) AD (3) BA (4) BC (5) BD

**46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப்பொருத்தமானதைத் தெரிவுசெய்க**

46) வைசேடிகரின் பதார்த்தக் கொள்கை
(1) பாவம் - அபாவம் என்ற வகைப்பாடுகளை உடையது
(2) ஈரிணை, மூவிணை அணுக்களைப் பற்றிப் பேசுகிறது
(3) கணாதரால் தோற்றுவிக்கப்பட்டது
(4) நவதிரவியங்களையே ஆராய்கிறது
(5) ஆரம்பவாதம் என அழைக்கப்படுகிறது

47) விசிட்டாத்வைத சரீரசரீரி
(1) ஈஸ்வர வாதத்தை முன்னிலைப்படுத்துகிறது
(2) அப்பிரதக்சித்தியால் விளக்கப்படுகிறது
(3) விஜாதீய - சஜாதீய பேதங்களால் உணர்த்தப்படுகிறது
(4) பிரபக்திக்கு அடிப்படையானது
(5) பரிணாம வாதத்தால் விளக்கப்படுகிறது

.

48) சைவசித்தாந்த சுத்தாத்விதம்
(1) முப்பொருளுண்மையைச் சாதிக்கிறது
(2) சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ளது
(3) நாற்பாதங்களைப் பற்றி விவரிக்கிறது
(4) குருவின் மூலம் ஈடேறலாம் என விவரிக்கிறது
(5) ஆன்மா, சிவத்துடன் இரண்டறக் கலத்தல் பற்றிக் குறிப்பிடுகிறது

.

49) குடைதளிகள்
(1) பல்லவர் காலத்திற்குரியவை
(2) உதயகிரி, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன
(3) மலைகளைக் குடைந்து அமைக்கப்படுபவை
(4) மண்டகப்பட்டுக் கல்வெட்டில் முன்மொழியப்பட்டவை
(5) கட்டுத்தளிகளுக்கு அடிப்படையானவை

50) ஆதிசங்கரரின் விவர்த்தவாதக் கருத்துக்கள்
(1) மாயைக்கு இரு நிலைகளுண்டு
(2) வார்த்தைகளால் விவரிக்க முடியாதது
(3) பிரம்மம் மாயையால் ஈஸ்வரனாகத் தோற்றமளிக்கிறது
(4) பிரம்மம் மட்டுமே உண்மைப் பொருள்
(5) உலகம் 'தோற்றம்' என்பதை விளக்குகிறது

# மாகாணக்கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

க.பொ.த உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

# Provincial Department of Education Northern Province

## G.C.E.(A/L) Pilot Examination

| | | |
|---|---|---|
| இந்துசமயம் II<br>Hinduism II | Three Hours<br>Gr -13 (2021) | 42 T II |

(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)

பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

### பகுதி I

**01)** "இந்து சமயத்தின் தொன்மையை அறிந்து கொள்வதற்கும் சிந்துவெளித் தொல்பொருட் சின்னங்கள் துணைபுரிகின்றன" இதனை அடிப்படையாகக் கொண்டு கீழ் வருபவற்றை விளக்குக.

அ) சிவவழிபாடு

ஆ) தாய்த்தெய்வ வழிபாடு

இ) கலைகள்

ஈ) சமூகநிலை

5×4=20 புள்ளிகள்

**02)** இந்து சமய இலக்கிய மரபில் புராணங்கள் தனித்தன்மை வாய்ந்தவை பின்வரும் தலைப்பில் கருத்துரைக்க.

அ) புராணம் என்பதன் பொருள் விளக்கம்

ஆ) புராணங்களின் பகுப்பு முறை

இ) புராணங்களின் அமைப்பு

ஈ) புராணங்களின் முக்கியத்துவம்

5×4=20 புள்ளிகள்

**03)** இந்து சமய வரலாற்றில் விஜயநகர காலம் தனிச்சிறப்புடையது. இக்கூற்றினை கீழ்வரும் தலைப்புகளில் விபரிக்க.

அ) இந்துக் கோயில்கள்

ஆ) இந்து சமய இலக்கியங்கள்

10×2=20 புள்ளிகள்

### பகுதி II

**04)** வேதாந்த தத்துவ வளர்ச்சியில் இராமானுயரின் விசிட்டாத்வைதம் பெறுகின்ற முக்கியத்துவத்தினை கீழ்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

அ) பிரம்மம்

ஆ) ஆன்மா

இ) உலகம்

ஈ) முத்தி நிலை

5×4=20 புள்ளிகள்

**05)** சாங்கியம் பெறும் முக்கியத்துவத்தினை கீழ்வரும் தலைப்புக்களின் ஊடாக விளக்குக.

அ) சாங்கியம் என்பதன் பொருள் (2 புள்ளிகள்)

ஆ) பிரமாண நூல்களும் தரிசனச் செல்வாக்கும் (4 புள்ளிகள்)

இ) புருட தத்துவம் (6 புள்ளிகள்)

ஈ) பிரகிருதி தத்துவம் (8 புள்ளிகள்)

06) சைவசித்தாந்தம் கூறும் விடயங்களினை மேல்வரும் தலைப்புகளில் விபரிக்க.

அ) ஆன்ம இருப்பு

ஆ) ஆன்மாவின் இலக்கணங்கள்

இ) ஆன்மாவும் ஆணவமும்

ஈ) முத்தி நிலை 5×4=20 புள்ளிகள்

**07)** அ) காவடி என்பதன் சொற்பொருள் விளக்கம் யாது? (2 புள்ளிகள்)

ஆ) காவடி ஆட்டம் பற்றிய தோற்றப் பின்னணியைத் தருக? (4 புள்ளிகள்)

இ) காவடி அமைப்பு முறை, ஆட்டத்தின் வகை, பயன்படும் இசைக்கருவிகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக? (6 புள்ளிகள்)

ஈ) காவடியின் தத்துவம், சமய, சமூக முக்கியத்துவம் பற்றி விளக்குக? (8 புள்ளிகள்)

**08)** இந்து அறிவியலின் சிறப்பு அம்சங்களை கீழ்வரும் தலைப்புகளில் ஆராய்க.

அ) இந்து அறிவியல் அறிமுகம்

ஆ) வேத இலக்கியங்களில் அறம்

இ) புராண இதிகாசங்களில் அறம்

ஈ) தமிழ்நூல்களில் அறம்

5×4=20 புள்ளிகள்